தமிழ்நாடு & பாண்டிச்சேரி திருநங்கையர்களின் மாற்றுப்பாலின மசோதா-2018 யை எதிர்த்து
பத்திரிக்கையாளர் சந்திப்பு
கவன ஈர்ப்பு அமர்வு

நாள்:21/12/2018

பெண்/ஆண் பாலினத்தை போன்று திருநங்கையர்,திருநம்பியர் என்ற மாற்றுப்பாலினத்தோராகிய நாங்கள் மானுடட்தின் ஒரு பிரிவு .நவீன விஞ்ஞானமும் இதனை உறுதி செய்கிறது . தற்போது குடும்ப சமூக அமைப்பினால் புரிந்து கொள்ளபடாமல் நாங்க ள் வேறு வழியில்லாமல் கடைவீதிகளில் கைதட்டி பிச்சைகேட்கும் சமூகமாக மாறியிருக்கிறோம் .”பிச்சைப்புகினும் கல்வி கற்று” கல்வி,எழுத்து,மருத்துவம்,பொறியியல்,நாடகம்,காவல் உட்பட பல்வேறு துறைகளில் நாங்கள் எங்களுடைய ஆளுமையை இவ்வுலகிற்கு முன்னால் நிரூபணம் செய்திருக்கிறோம் ஆனால் அரசின் அலட்சியட்தால் எங்களின் ஆளுமை அழுத்தப்படுகிறது.இதிலிருந்து எழத்தான் கடந்த சில வருடங்களாக கல்வி,வேலைவாய்ப்பு ,அரசியலில் எம்பாலினட்தோருக்கு இடப்பங்கீடு வழங்க வேண்டும் என இந்தியா முழுமையும் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி அடக்குமுறைகளை சந்தித்தோம்..

உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்தோம் அதனடிப்படையில் 2014 ஏப்ரல் 15 ஆம் நாள் அன்று கல்வி,வேலைவாய்ப்பில் முன்னுரிமை மற்றும் இடப்பங்கீடு வழங்க வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறியது .நாடாளுமன்ற உறுப்பினர் திரு.திருச்சி.சிவா அவர்கள் 2015 ஆம் ஆண்டு பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கிய தனிநபர் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.அதன் பின்னர் மத்திய அரசின் சமூகநீதிதுறை அமைச்சர் திரு.தாவர்சந்த் ஹெகலாட் அவர்கள் இடப்பங்கீடே இல்லாத ஒதுக்கப்பட்டு பிச்சையெடுக்கும் எம் சமூகத்தினரை குற்றவாளிகளாக சித்தரிக்கும் “Transgender protection Rights Bill-2016” என்ற மசோதாவை தாக்கல் செய்தார்.அதனை பல்வேறு கட்ட போராட்டங்களை இந்தியா முழுமையும் தொடர்ந்தோம்.பின்னர் பாராளுமன்ற நிலைக்குழு அமைச்சர்களிடமும் எங்களது கோரிக்கைகளை முன்வைத்தோம்.பாராளுமன்ற நிலைக்குழுவும் எமது கோரிக்கைகளை ஏற்று எமக்காக அரசுக்கு சில பரிந்துரைகளை கூறியது.இதை எதையும் கருதில் கொள்ளாமல் கடந்த 17-12-2018 அன்று லோக்சபையில் நிறைவேற்றியது.இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் .இம்மசோதாவை மாற்றுப்பாலினத்தோராகிய நாங்கள் துளியும் ஏற்றுகொள்ளமாட்டோம்.இதனை உடனே திரும்பெறுமாறு கூறுகிறோம்.

மசோதாவின் பிரச்சனைகுரிய அம்சங்கள்	திருநர் சமூகத்தால் பரிந்துரைக்கப்பட்டவை
III. 5,6. மேற்பார்வை குழு: 5. தன்னை திருநராக அடையாளப்படுத்திக்கொள்ள மாவட்ட நீதிபதியிடம் விண்ணப்பம் செய்து திருநர் அடையாள சான்றிதழ் பெறவேண்டும்.	எந்த ஒரு பாலினத்தவருக்கும் சுய அடையாள உரிமை அளித்து மற்றும் அவருடைய சுய அடையாளம் அவருடைய படிப்பு சான்றிதழ் தொடங்கி அனைத்து விதமான அடையால சான்றுகளிலும் மாற்ற வசதி செய்ய

6. தன்னிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை மாவட்ட நீதிபதி அரசாங்கத்தால் திருநர்களை அடையாளப்படுத்த அமைக்கப்படவிருக்கும் மாவட்ட மேற்பார்வை குழுவிற்கு பரிந்துரைக்க வேண்டும்.	வேண்டும். மாவட்ட மேற்பார்வை குழுவை நீக்க வேண்டும். உச்ச நீதிமன்றம் NALSA vs UOI தீர்ப்புபடி ஒருவரின் பாலின அடையாளத்திற்கு எந்தவித அறுவை சிகிச்சை அல்லது ஹார்மோன் சிகிச்சையை அரசாங்கம் கேட்பது சட்டத்திற்கு புறம்பான செயலாக பார்க்கவேண்டும். அதே போல் நிலைக்குழுவின் பரிந்துரைப்படி ஒருவரின் சுய அடையாளத்தை தாண்டி வேறு சாட்சியங்கள், அதாவது உடல் மற்றும் மனநல மதிப்பீடு கேட்பது அரசியலமைப்பு சட்டம் 19 மற்றும் 21 படி குற்றம் ஆகும்.
VIII. 19. (a) பிச்சை எடுக்க தூண்டுவதை குற்றசெயல் ஆக்குதல்: “திநர்களை பிச்சை எடுக்க தூண்டினாலோ அல்லது வற்புறுத்தினாலோ, அவருக்கு குறைந்த பட்சம் ஆறுமாதம் முதல் இரண்டு வருடம் வரை சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்	பரிந்துரை குழுவின் படி “இந்த உட்கூறு திருநர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் போர்வையில் அவர்கள் மீது தவறாக பயன் படுத்த வாய்ப்புள்ளது. பொது இடங்களில் இருப்பதாலேயே நிறைய திருநர்களை பிச்சை எடுப்பதற்கான சட்டங்களின் மூலம் கைது செய்வது நடந்து கொண்டிருக்கிறது.“ ஹிஜ்ரா மற்றும் கின்னர் ,திருநங்கை சமூகத்தை சேர்ந்தவர்கள் காலம் காலமாக விழாக்களில் அன்பளிப்பு வாங்குவது மற்றும் தட்சனை கேட்பது நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல் மற்ற பாலினத்தவர் போல திருநர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் அவ்வளவு எளிதாக கிடைப்பதில்லை. எங்களை பொருத்த வரையில் திருநர்களை பாதுகாக்கும் வன்கொடுமை சட்டமும், கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு மற்றும் பாதுகாப்பு சட்டமும் இயற்றப்பட வேண்டும்.
VIII. 19 (d) திருநர்களுக்கு எதிரான வன்கொடுமைகளுக்கு குறைந்த தண்டனையே வழங்கப்படுகிரது: “திருநர்களை உடல மற்றும் மனம் ரீதியான துன்புருத்தல், பாலியல் வன்கொடுமை மற்றும் அவர்களுடைய இருப்புக்கு தீங்கு விலைவித்தல், அவர்களுடைய வாழ்வாதாரத்திர்க்கு தீங்கு செய்பவர்களுக்கு குரைந்த பட்சம் ஆரு மாதம் முதல் அதிக பட்சம் இரண்டு ஆண்டு வரை அபராதத்துடன் தண்டனை அளிக்கப்படும்.”	திருநர்கள் மீது செலுத்தப்படும் பாலியல் வன்முறைக்கு ஏற்கனவே பெண்களுக்கு இருக்கும் சட்டம் உபயோகிக்கபட வேண்டும். அதே போல் உடல், மனம், வார்த்தைகள் ரீதியான வன்முறைகளுக்கு ஏற்கனவே இருக்கும் சட்டங்கள் உபயோகிக்கபட வேண்டும். திருநர் மற்றும் இடைலிங்கத்தோர் சார்ந்த வன்முறைகள் குறிப்பிட்டு சட்டம் இயற்ற வேண்டும். எ.கா.: ஒருவருடைய சுய பாலினத்திற்கு எதிராக செயல் படுபவர்கள், கட்டாய ஹார்மோன் மற்றும் உடல் அறுவை சிகிச்சைக்கு தள்ளுவது, தவறான மனநல ஆலோசனை வழங்குவது, கட்டாய திருமணம்

	செய்து வைப்பது...அதேபோல் மருத்துவ வசதிகளை நிராகரிப்பது, வேலை மற்றும் கல்வி மறுப்பது, வீடு மறுப்பது அனைத்தும் சேர்க்கபட வேண்டும். திருநர்களை கைது செய்யும் பொழுது அவர்கள் விருப்பபடி பெண்/ஆண் காவலர்களால் கைதுசெய்ய வேண்டும். அதேபோல் அவர்களுக்கான தனி சிறையில் அவர்களுடைய சுய பாலின அடையாளம் சார்ந்த மருத்துவ மற்றும் சட்ட வசதி வழங்கபட வேண்டும்.
V. 13 குடும்பம் மற்றும் வீடு: (3) “ஒரு திருநரை அவர்களுடைய குடும்பத்தால் பார்த்துக்கொள்ள முடியவில்லை என்றால், நீதிமன்றம் வழியாக அவரை மறுவாழ்வு மையத்திற்க்கு அனுப்பவேண்டும்”	இந்திய அரசியல் அமைப்பு சட்டப்படி இந்த உட்கூறு திருநருக்கான வீடு உரிமையை பறிப்பதாகும். வீடுகளில் மற்றும் மறுவாழ்வு மைய்யங்களில் நடக்கும் வன்முறைகளை நிராகரிக்கிறது. குடும்ப அமைப்பு என்பது அதை சார்ந்த நபர்களுடைய விருப்ப படி சட்டபூர்வமாக அங்கிகரிக்கப்பட வேண்டும் – நண்பர்கள், தேர்ந்தெடுத்த குடும்பம், திருமணம், ஆகிய உறவுகள். பரிந்துரை குழுவின் படி “மூத்த திருநங்கைகள்” பாதுகாப்பில் கல்வி, மருத்துவ வசதி, பாலின அடையாள சிகிச்சை, சொத்து உரிமை மற்றும் அடக்க உரிமைகள் இருக்கும் இளைய திருநர்கள் குடும்பமாக பார்க்கப்பட வேண்டும்.
VI. 16. மருத்துவ வசதி	இலவச பாலின அறுவை சிகிச்சை / பாலின அடையாள சிகிச்சை வழங்க வேண்டும். இவை மருத்துவ காப்பீட்டிலும் அடங்க வேண்டும். அதே போல் மருத்துவமனையில் பெண், ஆண் அல்லது திருநர் வார்டுகளில் சுய அடையாளப்படி சேர்க்க வேண்டும்.
VII. 17. திருநர்களுக்கான தேசிய மன்றம் (கவுன்சில்)	தேசிய மற்றும் மாநில திருநர் ஆணையங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்த மன்றத்தில் பலதரபட்ட பின்னணியிலிருந்து வரும் திருநர்கள் உறுப்பினர்களாக அமர்த்த வேண்டும். திருநர்கள் நலன் மற்றும் குறைகளை தீர்ப்பதற்கு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.